1979 ஏப்ரல் 20]

திரு. க. மருதாசலம் : பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தறியில் தயாராகும் இந்த பாலிஸ்டர் துணி எந்தெந்த மாநிலங்களுக்கெல்லாம் அனுப்பப் படுகிறது? மேலும் எங்கெல்லாம் அனுப்புவதற்கு இந்த அரசு முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறது?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : சென்ற ஆண்டுதான் கைத்தறியில் பாலிஸ்டர் துணியை உற்பத்தி செய்து அறிமுகம் செய்து விற்பனைக்குக் கொண்டு வந்திருக்கிறோம். நமது மாநிலத்திலுள்ள தேவையையே நம்மால் இன்னும் பூர்த்தி செய்ய முடியவில்லை. அந்த அளவுக்கு இனனும உற்பத்தி பெருகவில்லை. ஆகவே இப்போது எந்த மாநிலத்திற்கும் கைத்தறி பாலிஸ்டர் துணி அனுப்பப்படுவதில்லை.

திரு. செ. சிவசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது கொண்டு வரப்பட்டிருக்கின்ற பாலிஸ்டர் துணி ஏற்கனவே வெளி வந்த பழைய டிசைன்களில்தான் இருக்கிறது. ஆகவே புதிய டிசைன்களில், இந்தக் கைத்தறி பாலிஸ்டர் துணி களைக் கொண்டு வருவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு உறுபபினர் அவர்கள் இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் கைத்தறி வெள்ளி விழா கண்காட்சியைப் போய்ப் பார்த்தால், எந்த அளவுக்கு புதிய ரகங்கள் எல்லாம் வந்திருக்கின்றன என்பதைத் தெரிந்து கொள்ள முடியும்.

திருநாகேசுவரத்தில் சாயத் தொழிற்சாலை.

வினா எண். 714—திரு. செ. இராமலிங்கம்; மாணபுமிகு கைத்தறி பஞ்சாலைகள் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருநாகேசுவரத்தில் அரசு தரப்பில் சாயத் தொழிற்சாலை ஒன்று நிறுவும் செயற் குறிப்பு ஏதும் உள்ளதா ?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : இல்லை.

பி. காம். வகுப்புகளில் மாணவர்களைச் சேர்த்தல்.

*வினா எண். 742—திரு. எஸ். கணேசன்: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பி. காம். வகுப்புகளில் மாணவர்களைச் சேர்த்துக் கொள்ள நன்கொடைகள் வசூலிக்கப்படுகின்றன என்ற புகார் களைத் தவிர்க்க புது நடைமுறை ஒன்றை அரசு ஏற்படுத்தி உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?